# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## OS.No. 279/2024

dated : 27.01.2026

P.W.1

Name செல்வி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3ம் பிரதிவாதி என் தங்கை மற்றவர்கள் என் சகோதரர்கள். பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன். நான் கூறிய தகவலின் அடிப்படையில்தான் வழக்கு தயார் செய்யப்பட்டது. 1வது தபசில் 1வது இலக்கச் சொத்து என் தந்தை பெயரில் கிரையம் பெறப்பட்டுள்ளது. 4.70 செண்ட் அது காலியிடமாகும். அது யாருக்கும் பிரித்துக் கொடுக்கப்படவில்லை. 1வது தபசில் 2 வது இலக்கச் சொத்து என் தந்தை பெயரில் கிரையம் பெறப்பட்டது அது வீடாக உள்ளது. அதில் 1ம் பிரதிவாதி குடியிருந்து வருகிறார். அதற்கு நேர் எதிர்திசையில் 2ம் பிரதிவாதி கருப்பையா குடியிருக்கும் வீடாகும். அதுவும் என் தந்தை பெயரில்தான் உள்ளது. அது 1ம் தபசில் 3ம் இலக்கச் சொத்தாகும். அந்த வீட்டிற்கும் மேற்கே தரைத்தளம் மற்றும் முதல்தளம் கொண்ட வீடு உள்ளது அது என் தாயார் சுப்பம்மாள் பெயரில் உள்ளது. மாடியில் முழுவதுமாக அறைகள் இல்லை. மேற்படி வீட்டின் தரைத் தளத்தை கேபிள் டிவிக்காக கொடுத்து 3ம் பிரதிவாதி மட்டும் வாடகையை பெற்று வருகிறார் என்றால் சரியல்ல நால்வரும்

வாடகை பெற்று வருகிறோம். மாடிப்பகுதியை பஞ்சுமிட்டாய் விற்பவருக்கு வாடகைக்கு விட்டுள்ளோம். மேற்படி வீடுதான் 2ம் தபசில் சொத்தாகும். 4ம் பிரதிவாதி குடியிருக்கும் வீடு 1ம் பிரதிவாதி பெயரில் கிரையம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான் அதை என் அப்பா பணம் கொடுத்து 1ம் பிரதிவாதி வாங்கியுள்ளதாக சாட்சி கூறுகிறார். 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்தாக கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரையம் பெறும்போது அவருக்கு 25 வயது என்றால் சரியல்ல. மேற்கண்ட 1, 2 தபசில் சொத்திற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். அவைதான் வா.சா.ஆ.1 முதல் 5 ஆகும். வா.சா.ஆ.5 3ம் தபசில் சொத்திற்கான கிரைய ஆவணம் ஆகும். அதனை வாங்குவதற்கு என் தந்தை பணம் ஏதும் கொடுக்கவில்லை என்றும் அதனால்தான் மேற்படி ஆவணத்தில் சாட்சியாக இசக்கி மற்றும் ஐயம்பெருமாள் என்ற 3ம் தரப்பினர்கள் சாட்சியாக இருந்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனக்கு 1990ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. நான் திருமணத்திற்கு பின்னர் சிறிது நாள் செங்கோட்டையில் வசித்து வந்தோம். சுமார் 10 ஆண்டுகள் வசித்தோம் அதன்பின்னர் தென்காசியில் எல்.ஆர்.எஸ் பாளையத்தில் வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறோம். எனக்கு திருமணமாகி கணவர் வீட்டிற்கு சென்றபின்னர் குடும்ப நிகழ்வுகள் பற்றி எதுவும் தெரியாது என்றும் வழக்கிற்காக 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் பற்றி தெரியும் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 4வது இலக்கச் சொத்தான 800 கிராம் நகை விபரங்கள் எப்போது யார் பெயரில் வாங்கப்பட்டது என்று என் வசம் ஆவணங்கள்

இல்லை வீடியோ பதிவுதான் உள்ளது. அந்த நகை வாங்கப்பட்டதற்கான இரசீதுகளும் தாக்கல் செய்யப்படவில்லை. பால்ராஜ் என்பவரின் பெயரில் நகை அடகு வைக்கப்பட்டது என்பதற்கு பால்ராஜ் பெயரில் உள்ள அடகு இரசீதுகள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்தந்தை பெயரில் ரூ.10 லட்சத்திற்கான ஆயுள் காப்பீடு உள்ளதற்கான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பா அரசு ஒப்பந்தகாரர். குற்றாலம் பேரூராட்சியிலிருந்து என் தந்தைக்கு வரவேண்டிய தொகை ரூ.8 லட்சம் என்பதற்கு என் வசம் ஆவணங்கள் ஏதுமில்லை. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட வ.சா.ஆ.11 ல் 1999 முதல் 2008 வரையான காலத்தில் என் தந்தைக்கு கிடைக்க வேண்டிய தொகை ரூ.56,594/- மட்டுமே என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ-11 ல் என் தந்தைக்கு கிடைக்க வேண்டிய தொகையை வேறு எவருக்கும் என் தந்தை சார்பில் செலுத்தப்பட்டதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். 2010 ம் ஆண்டு என் தாயார் இறந்துபோனார். முப்பிடாதிக்கு அப்போது திருமணம் ஆகவில்லை. என் தந்தை 2012 ல் இறந்துபோனார். என் தந்தை அவர் கைவசமிருந்த பணம் நகைகளை போட்டு 3 ம் பிரதிவாதிக்கு திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளும், 4 ம் பிரதிவாதியும் திருமணச் செலவிற்கு பணம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. என் தாயார் இறக்கும் முன்பு திருநெல்வேலி ஷிபா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றும் அங்கு அவருக்கு ரூ.3,70,000/- செலவு ஆனது என்றும் அந்த செலவுகளை 1, 2 மற்றும் 4 ம் பிரதிவாதிகள் செலவு

செய்தார்கள் என்றால் சரியல்ல. என் தந்தை பெயரிலுள்ள வங்கி கணக்கு புத்தகத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த வங்கி கணக்கு புத்தகம் என்வசம் உள்ளது அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் அதனை தாக்கல் செய்ய இயலும். வா.சா.ஆ.5 ல் 1ம் பிரதிவாதி கொத்தனார் வேலை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அது தவறானதாகும். 1ம் பிரதிவாதி தற்போது வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறார். 10 வருடங்களாக அவ்வாறு தொழில் செய்து வருகிறார். அவர் பணம் கைவசம் வைத்துள்ளார். அதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கருப்பையா மற்றும் 4ம் பிரதிவாதி பலவேசம் வட்டிக்கு பணம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். என் அப்பா பெரிய ஒப்பந்தகாரர் என்பதால் திருமணத்தின் போது 150 முதல் 200 பவுண் நகை போட்டார் என்றால் சரியல்ல. 20 கிராம் நகை மட்டும்தான் போட்டுள்ளார்கள். என் கணவர் குடும்பத்தினர் வசதியானவர்கள் என்றால் சரிதான் அதனால்தான் நகை பணம் வேண்டாமென்று என்னை திருமணம் செய்துகொண்டார்கள் என்றால் சரியல்ல என் அப்பா கொடுக்கவில்லை. எனது வழக்குரையில் பால்ராஜ் யாரிடம் நகைகளை கொடுத்தார் என்று கூறியிருக்கிறேனா என்றால் கூறியிருக்கிறேன். நாலுபேரிடமும் கொடுத்ததாக கூறியிருக்கிறேன். வழக்குரையில் 1ம் பிரதிவாதியிடம் மட்டும்தான் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் தற்போது சாட்சியத்தில் கூறுவதுதான் உண்மை. வா.சா.ஆ.10 ல் பலவேசம்தான் நகையை திருப்பினார் என்று காவல்

கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாரில் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். என் அப்பா இறந்தது முதலே பங்கு கேட்டு வந்தேன். நான் கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் போலீசார் விசாரணை நடத்தினார்கள் என்றால் சரியல்ல. நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கும்படி சொன்னார்கள். கேபிள் டிவிக்கு வாடகைக்கு விட்டிருந்த வீட்டில்தான் என் அப்பா குடியிருந்தார். 1ம் தபசில் 2வது இலக்கச் சொத்திற்கு 1வது பிரதிவாதி என் தந்தை இறந்த 2 மாதத்திலேயே வந்துவிட்டார். தற்போது சங்கரன் இருக்கும் வீட்டில் பலவேசம் இருந்தார் பலவேசம் இருக்கும் வீட்டில் சங்கரன் இருந்தார். 1வது தபசில் 3வது இலக்கச் சொத்தில் கருப்பையா முழுமையாக குடியிருந்து அனுபவித்து வருகிறார் முன்னதாக ஒரு பகுதியில் மட்டும் குடியிருந்தார். 2வது தபசில் சொத்தில் என் அப்பா இறந்தபின்னர் கீழ்பகுதியை 3ம் பிரதிவாதியும், மேல்பகுதியை வாதியாகிய நானும் வாடகைக்கு விட்டு அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல. நான் புகார் கொடுத்ததால் என் தம்பி வெளியூரிலிருந்து வந்ததும் பிரித்துக்கொள்ளலாம் என்றும் இடைக்காலமாக வாடகை வாங்கிக்கொள்ளலாம் என்று போலீசார் சொன்னார்கள். கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக வாடகை வாங்கி வருகிறேன். நான் மாடியில் குடியிருக்கவில்லை. வழக்கு தாக்கல் செய்யும்போது அஞ்சலகத்தில் வைத்திருப்பதாக சொல்லப்படும் சேமிப்புத் தொகை பற்றி கூறவில்லை. அஞ்சலகத்தில் என் அப்பா பெயரில் எவ்வளவு தொகை உள்ளது என்று தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின்படி மனுதாக்கல் செய்து தகவல் பெறவில்லை.

வழக்குரையில் ஆயுள்காப்பீட்டுத் தொகை ரூ.10 லட்சம் வரவேண்டியிருப்பதாக கூறியுள்ளேன் வா.சா.ஆ.10 ஆவணத்தில் ரூ.7 லட்சம் என்று குறிப்பிட்டுள்ளேன். வா.சா.ஆ.10 ல் கூறியுள்ள தொகைக்கு வட்டியும் சேர்த்து கூறியுள்ளேன். ஆயுள்காப்பீட்டுக் கழகத்தில் என் அப்பா பெயரில் எவ்வளவு தொகை உள்ளது என்று தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின்படி மனுதாக்கல் செய்து தகவல் பெறவில்லை. என் அப்பா இறந்த இரண்டாவது மாதத்திலேயே 1ம் தபசில் 1வது இலக்கச் சொத்தை விற்று அதில் கிடைக்கும் பணத்தை அனைவரும் பங்கீட்டுக் கொள்வோம் என்றும் 1வது தபசில் 2 வது இலக்கச் சொத்தை 1ம் பிரதிவாதிக்கும் 1வது தபசில் 3 ம் இலக்கச் சொத்தை 2ம் பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட்டது என்றும், 2வது தபசில் சொத்தின் கீழ்தளத்தை 3ம் பிரதிவாதிக்கும் மேல்தளத்தை எனக்கும் ஒதுக்கப்பட்டது என்றும், 3வது தபசில் சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதால் அதில் 3ம் பிரதிவாதி வாடகை கொடுத்துவிட்டு குடியிருந்து கொள்ள வேண்டுமென்றும் 1, 2 பிரதிவாதிகள் அதற்கான பாகப்பங்கீட்டு தொகையாக தலா 2 1/2 லட்சம் வீதம் 4ம் பிரதிவாதிக்கு கொடுக்க வேண்டுமென்றும் என் தந்தை கைவசம் இருந்த நகையை கொண்டு 3ம் பிரதிவாதிக்கு திருமணம் செய்து கொடுக்கப்பட்டது என்றும் எனவே ஏற்கனவே பேசி முடித்தபடி பாகம் நடந்த சொத்திற்கு மீண்டும் ஒருமுறை பாகம் கோர முடியாது என்றும் 4ம் தபசில் சொத்தே கிடையாது என்றும் அது கற்பனையானது என்றும் 3ம் தபசில் 1ம் பிரதிவாதிக்கு முழுமையாக பாத்தியப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. 3 வது இலக்கச் சொத்து 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து

என்றும், ஒருவேளை நான் கோரும் பாகம் கிடைக்கதக்கது எனில் அது 1, 2 தபசில் 4 வது தபசில் 3 வது இலக்கச் சொத்து பொறுத்த அளவில் மட்டுமே கிடைக்கதக்கது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.01.27 17:46:40 +0530